| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பிரபு, த/பெ ராமசாமி | அ.வ.எண்.233/2024 | 10.06.2026 |

**குறுக்கு விசாரணை**

1. தற்போது எனக்கு வயது 44 ஆகிறது. எனது பிறந்த தேதி 25.12.1982 ஆகும். இந்த வழக்கு தாக்கல் செய்த போது எனக்கு வயது 41. வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் வழக்கு சொத்து என்னுடையது என பரிகாரம் கோரியுள்ளேன். நான் விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்திற்கு கடந்த வாரம் சென்றேன். நான் தற்போது நெடுங்கூரில் வசித்து வருகிறேன்.
2. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 15 சென்ட் ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் எனது பெரியப்பா முத்துசாமி பெயரில் இருந்தது. (சாட்சி தற்போது முத்துவீரன் பெயரில் இருந்ததாக கூறுகிறார்). மேற்படி முத்துவீரன் பெயரில் பட்டா போன்ற ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. முத்துவீரனை தொடர்ந்து மேற்படி சொத்தை யார் அனுபவம் செய்துவருகிறார் என்றால் எனது அப்பா ராமசாமி மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோர் அனுபவம் செய்து வந்தார்கள்.
3. தாவா சொத்து முத்துவீரனுக்கு எதன் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றால் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். பிரதிவாதி சுந்தரியும், எனது தாத்தா முத்து வீரனும்

உடன் பங்காளிகள் ஆவார்கள். முத்துவீரனுக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி சுந்தரியின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. மேற்படி சுந்தரிக்கு எத்தனை வாரிசு என்றால் 6 நபர்கள் ஆவார்கள். சுந்தரி அவரது தகப்பனாருக்கு எத்தனையாவது குழந்தை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து அருகில் எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் வழக்கு சொத்திற்கு எதிர்புறம் உள்ளது. அதன் சர்வே எண் எனக்கு தெரியாது.

4. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் இவ்வழக்கில் எனது அப்பா ராமசாமி மற்றும் பெரியப்பா கிருஷ்ணசாமி ஆகியோர் பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா மனு கொடுத்ததன் பெயரில் ஏற்பட்டதா என்றால் ஆம். பட்டா வாங்கும் போது வட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டாரா என்றால் எனது அண்ணன் வாங்கினார். விசாரணை செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் சுந்தரி மற்றும் கணேசனை விசாணை செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவை வட்டாட்சியர் வழங்கினாரா அல்லது கோட்டாட்சியர் வழங்கினாரா என்றால் யார் வழங்கியது என்று எனக்கு தெரியாது.

5. எனது தகப்பனார் ராமசாமி 19.06.2012ம் தேதி இறந்துவிட்டார். 2009ம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எப்போது தெரியவந்தது என்றால் பட்டா மாற்றம் செய்யப்பட்ட போது தெரியவந்தது. 2011ம் ஆண்டு பிரதிவாதி சுந்தரி அவரது

பெயரை பட்டாவில் மாற்றம் செய்ய முயன்ற போது தான் தெரியவந்தது. 2009 ல் எனக்கு 30 வயது இருக்கும். எனக்கு சொந்த ஊரே நெடுங்கூர் தான். தற்போது ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். வா.சா.ஆ.1 ஆவணம் எங்களால் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. முத்துவீரனின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி முத்துவீரனுக்கும் தாவா சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**Signed,**
பிரபு

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.